## *32*

# இராஜ்யத்தைக் குறித்து மேலும் உவமைகள்

## (13:24-52)

*அடுத்துவரும் இராஜ்யத்தைக் குறித்த உவமைகளில் பயன்படுத்தப்பட்ட பொருட்கள் இயேசுவுக்கு செவிகொடுத்தவர்களுக்கு நன்கு அறியப்பட்டதும் தெளிவானவைகளும் ஆகும்.*

### பரலோக ராஜ்யத்தைக்குறித்து மூன்று கூடுதல் உவமைகள் *(13:24-33)*

***களைகள் (13:24-30)***

***[24]வேறொரு உவமையை அவர்களுக்குச் சொன்னார், பரலோக ராஜ்யம் தன் நிலத்தில் நல்ல விதையை விதைத்த மனுஷனுக்கு ஒப்பாயிருக்கிறது.***
***[25]மனுஷர் நித்திரை பண்ணுகையில் அவனுடைய சத்துரு வந்து, கோதுமைக்குள் களைகளை விதைத்துவிட்டுப் போனான்.***
***[26]பயிரானது வளர்ந்து கதிர்விட்ட போது களைகளும் காணப்பட்டது.***
***[27]வீட்டு எஜமானுடைய வேலைக்காரர் அவனிடத்தில் வந்து: ஆண்டவனே, நீர் உமது நிலத்தில் நல்ல விதையை விதைத்தீர் அல்லவா? பின்னை அதில் களைகள் எப்படி உண்டானது என்றார்கள்.***
***[28]அதற்கு அவன்: சத்துரு அதைச் செய்தான் என்றான். அப்பொழுது வேலைக்காரர்: நாங்கள் போய் அவைகளைப் பிடுங்கிப்போட உமக்குச் சித்தமா? என்று கேட்டார்கள்.***
***[29]அதற்கு அவன்: வேண்டாம், களைகளைப் பிடுங்கும்போது நீங்கள் கோதுமையையுங் கூட வேறோடே பிடுங்காதபடிக்கு இரண்டையும் அறுப்பு மட்டும் வளர விடுங்கள்.***
***[30]அறுப்புக்காலத்தில் நான் அறுக்கிறவர்களை நோக்கி: முதலாவது களைகளைப் பிடுங்கி, அவைகளைச் சுட்டெரிக்கிறதற்கு கட்டுகளாக கட்டுங்கள்; கோதுமையையோ என் களஞ்சியத்தில் சேர்த்து வையுங்கள் என்பேன் என்று சொன்னான் என்றார்.***

***வசனம் 24.*** *கர்த்தர் படகிலே போதித்துக் கொண்டிருந்த காட்சிக்கு மத்தேயு மறுபடியும் திரும்புகிறார் (13:1, 2). விதைக்கிறவனைப்பற்றிய உவமையைச் சொன்னபின்பு (13:3-9),* ***இயேசு*** *கூட்டத்தினருக்கு* ***வேறு ஒரு உவமையைச் சொன்னார்*** *(காண்க 13:31, 33). இந்த அதிகாரத்தின் மற்ற உவமைகளைப் போலவே, இது* ***பரலோகராஜ்யத்துடன்*** *தொடர்புடையதாய்*

இருக்கிறது (13:31, 33, 44, 45, 47). நிலத்தின் சொந்தக்காரன் இந்த உவமையில் நல்ல விதையையே **தன் நிலத்தில் விதைத்தான்;** அது "கோதுமை" என்று வசனம் 25 சுட்டிக் காட்டுகிறது. **நல்ல விதையை அவன்** விதைத்தமையால், நியாயப்படி நல்ல விளைச்சலை அவன் எதிர்பார்த்தான். இருப்பினும், அது அப்படியிருக்கவில்லை.

**வசனம் 25.** வேலைக்காரர் **நித்திரை பண்ணும் போது** என்பது உண்மையில் அவர்கள் சோம்பேறிகளாக உறங்கிக் கொண்டிருந்தனர் என்று பொருள் அல்ல; அவர்கள் சாதாரணமாக இரவில் தூங்கினார்கள். அந்தத் தூக்கம் ஒரு சத்துரு வந்து விதைக்கப்பட்ட தானியத்தின் அறுவடையை கெடுக்கச் செய்து விட்டது. களைகள் ஒருவேளை "முள்பூண்டுகளைக்" குறிக்கிற "darnel" புல் வகை களைகளாயிருக்கலாம் (காண்க NEB), இவைகள் பழங்கால கிழக்கத்திய தேசங்களில் அதிகமாய் வளர்ந்தன. இந்த "முள் பூண்டு" ஒருவகை விஷம் உள்ள தேரல் புல்வகை கோதுமையைப் போன்றே தோற்றத்தில் காணப்படும். இதன் விதையை கோதுமையுடன் சேர்த்து ஒரு மனிதன் விழுங்கி விட்டால் வியாதிப்படுவான்.

ஒரு சத்துருவின் நிலத்தில் களையை விதைப்பது பழிவாங்கும் எண்ணமான ஒரு தீமையான செயலாக இயேசுவின் நாட்களில் கருதப்பட்டது, ரோமன் சட்டத்தில் அதற்கு தடை விதிக்கப்பட்டிருந்தது.[1] கேட்டுக் கொண்டிருந்தவர்கள் இந்த உவமை கதையைக் கேட்டு நிச்சயமாக அதிர்ச்சியடைந்திருக்க மாட்டார்கள்.

**வசனங்கள் 26-28. பயிரானது வளர்ந்து கதிர் விட்டபோது களைகளும் காணப்பட்டது.** அவைகள் முளைக்கத் துவங்கிய நேரத்தில், களைகள் கோதுமைச் செடியிலிருந்து வித்தியாசமான தோற்றமுள்ளதாயிருந்திராது. ஆகிலும், அது வளர்ந்து கதிர்விடத் துவங்கியபோது, அறிந்தவர்கள் அதின் வித்தியாசத்தைக் கண்டு பிடித்திருப்பார்கள். களைகள் முளைத்திருப்பது வழக்கத்துக்கு அப்பாற்பட்ட காரியமல்ல, ஆனால் மிக அதிகமாக வளர்ந்திருந்த காட்சிதான் **வேலைக்காரருக்கு** அதிர்ச்சியை ஏற்படுத்தியிருந்தது. அவர்கள் இதை தங்கள் முதலாளிக்கு, **வீட்டெஜமானுக்குத்** தெரியப்படுத்தினபோது, (*oikodespotēs*), உடனே அவன் என்ன நடந்திருக்கும் என்று கூறினான் **வேலைக்காரர் அவைகளை பிடுங்கிப் போடக் கேட்டார்கள்,** ஆனாலும் கோதுமைக்கு சேதமில்லாமல் அப்படிச் செய்ய முடியாது என்று உணர்ந்திருந்த எஜமானன் போதிய அறிவு பெற்றிருந்தான். அந்த நேரத்தில், இரண்டு வகை செடிகளுமே நன்கு ஆழமாக வேர்களை பதிய விட்டிருக்க வேண்டும் எனவே களைகளை அப்புறப்படுத்த எடுக்கும் எந்த முயற்சியும் கோதுமையையும் சேர்த்தே பிடுங்க வேண்டியிருந்திருக்கும்.

**வசனங்கள் 29, 30.** நிலத்தின் சொந்தக்காரனின் முடிவு ஞானமுள்ளது. வேலைக்காரர்களிடம் அவன் **களையும் கோதுமையுமாகிய** இரண்டுமே தொடர்ந்து வளரஅனுமதிக்கும்படி சொன்னான். **அறுவடை நேரத்தில்,** அவைகள் தனித்தனியே திறமையாக அறுக்கிறவர்களைக் கொண்டு பிரிந்தெடுக்கப்படும். களைகள் தனியே சுட்டெரிக்கப்படுவதற்கென கட்டுகளாக கட்டப்படும், கோதுமை எஜமானனுடைய களஞ்சியத்திலே சேர்க்கப்படும் (காண்க 3:12; 6:26).

கோதுமையிலிருந்து களைகளை பிரித்தெடுக்க மூன்று வகையான

*முறைகள் கையாளப்பட்டன. (1) களைகளைக் காட்டிலும் உயரமாக கோதுமை வளர்ந்து நிற்குமானால் கோதுமைகளை மட்டும் அறுவடை செய்து விட்டு, தோட்டமுழுவதையும் தீவைத்து எரிப்பது. (2) அறுவடையின் போது கோதுமையையும் களைகளையும் தனித்தனியே பிரித்து எடுப்பது. கோதுமை கதிர்கள் அடிக்க ஏதுவாக கட்டுகளாக கட்டுவார்கள். களைகளை குவியலாக போட்டு சுட்டெரிப்பார்கள். (3) கோதுமை கதிரடிக்கப்படுவதற்கு முன் களை விதைகள், மற்றும் பதடுகளைத் தனியாகவும் கோது மணிக் கதிர்களைத் தனியாகவும் பிரித்தெடுத்து கோதுமைகளை கதிரடித்து சுத்தம் பண்ணுவார்கள். இரண்டாவது முறையையே இந்த உவமையில் குறிப்பிடப்படுகிற வேலைக்காரர் செய்வார்கள்.*

*இயேசு பின்னதாக இந்த உவமையை விளக்கமளித்து அவர் (13:36-43), விதைக்கிறவனைப் பற்றிய உவமையைப் போலவே எடுத்துச் சொல்லுகிறார்.*

***கடுகு விதை (13:31, 32)***

***[31]வேறொரு உவமையை அவர்களுக்குச் சொன்னார்; பரலோக ராஜ்யம் கடுகு விதைக்கு ஒப்பாயிருக்கிறது; அதை ஒரு மனுஷன் எடுத்துத் தன் நிலத்தில் விதைத்தான்.***

***[32]அது சகல விதைகளிலும் சிறிதாயிருந்தும், வளரும்போது, சகல பூண்டுகளிலும் பெரிதாகி, ஆகாயத்துப் பறவைகள் அதின் கிளைகளில் வந்து அடையத்தக்க மரமாகும் என்றார்.***

***வசனங்கள் 31, 32.*** *அடுத்த* ***உவமையில் பரலோகராஜ்யம் ஒரு கடுகு*** *விதைக்கு ஒப்பிடப்படுகிறது. இந்த விதை உண்மையில்* ***சகல விதைகளிலும் சிறியதாயிருப்பதில்லை, ஆனால்*** *மிகச்சிறிதான "புல் பூண்டு" விதை. காட்டில் வளரும் ஒரு வண்ணமலர் விதையும், ஊசியிலை மரத்தின் விதையும் கூட உதாரணமாக, அளவில் மிகச் சிறியவை தான். எல்லாத் தாவர மரஞ்செடி கொடிகளின் விதைகளை இயேசு ஒப்பிடாமல், பலஸ்தீனாவில் வளரும் புல் பூண்டு வகையிலான விதையைக் குறிப்பிடுகிறார். கடுகு விதை பழமொழிகளில் பயன்படுத்தப்படுகிறது உண்டு ("கடுகளவும் அல்லது கடுகளவு சிறிய").[2] இயேசு இந்த உதாரணத்தை வேறு சில இடங்களில் தமது போதனையில் குறிப்பிட்டார் (17:20; லூக்கா 17:6).*

*கடுகு செடி மட்டும் குறிப்பாக பலஸ்தீனாவின் வறண்ட சீதோஷ்ண நிலையில் நன்கு வளரக் கூடிய ஒன்று. கடலுக்கு அருகாமையில் வளரும் வகைகள், பிற பகுதிகளில் வளரும் கடுகுச் செடியைக் காட்டிலும்,* ***ஒரு மரம்*** *போல் பெரிய வடிவில் வளரும்.[3]* W. F. Albright *மற்றும்* C. S. Mann *ஆகியோர், "கடுகுச் செடி பொதுவாக கலிலேயா கடலருகில் பத்து அடி உயரம் வரை வளருகின்றன," என்று எழுதினர்.[4] நல்ல முறையில் பராமரித்தால் பதினைந்து அடி உயரம் கூட வளருகின்றன. இந்த வகை கடுகுச் செடிகள் உறுதியான* ***கிளைகளை*** *உடையதாய் வருடத்தின் ஒரு குறிப்பிட்ட காலக் கட்டத்தில் காணப்படும் அந்த நேரத்தில்* ***பறவைகளுக்கு*** *ஒரு வீடாய்க் காட்சியளிக்கும்.*

*கடுகுச் செடிகளை "ஒரு மரம்" என்று குறிப்பிடுவது பழைய ஏற்பாட்டில் இராஜ்யங்களை மரத்துடன் ஒப்பிட்டு மிகைப்படுத்தி பேசுவதாகும்.*

உதாரணமாக, எசேக்கியேல் புத்தகத்தில், தேவன் கேதுரு மரத்தின் நுனிக் கிளைகளில் ஒன்றை எடுத்து, அதை உயர்ந்த மலையின்மேல் நடுவார். அது கொப்புக்களை விட்டு, கனிதந்து, “மகிமையான கேதுருவாகும்”; அதின் கீழே சகல வித பட்சி ஜாதிகளும் தங்கி, அதின் கிளைகளின் நிழல்களிலே தாபரிக்கும் என்று சொல்லப்படுகிறது (எசேக்கியேல் 17:22-24; காண்க 31:2-18; தானியேல் 4:10-12, 19-22).

கடுகு விதையைப்போல, பரலோக ராஜ்யம் அதன் துவக்க காலத்தில் மிகச் சிறியதாயிருந்தது ஆனால் துரிதமாக மிகச் பெரிதாக வளர்ந்தது. ராஜ்யத்தை இயேசு பன்னிரெண்டு அப்போஸ்தலரைக் கொண்டு துவங்கினார், ஆனால் அவருடைய ராஜ்யம் முடிவுகாலத்தில் உலகமெங்கும் பரவியிருக்கும் (மத்தேயு 28:19; மாற்கு 16:15). ஆகாயத்துப் பறவைகள் சில வேளைகளில் யூத இலக்கியங்களில் புறஜாதிகளைக் குறிக்கத் தக்கதாக பேசுகிறது.[5]

*புளித்த மா (13:33)*

**[33]வேறொரு உவமையை அவர்களுக்குச் சொன்னார்; பரலோக ராஜ்யம் புளித்தமாவுக்கு ஒப்பாயிருக்கிறது; அதை ஒரு ஸ்திரீ எடுத்து, முழுவதும் புளிக்கும் வரைக்கும், மூன்றுபடி மாவிலே அடக்கி வைத்தாள் என்றார்.**

**வசனம் 33.** புளித்த மா என்பது அப்பம் செய்வதற்கு பயன்படுத்தப்படும் ஒரு பொருள். அது உள்ளிருந்து கிரியை செய்கிறது. புதிய ஏற்பாட்டுக் காலத்தில், **ஒரு ஸ்திரீ** அப்பம் சுடுவதற்கு ஆயத்தப்படுத்தப்பட்டிருக்கும் மாவிலிருந்து அது அடுமனைக்கு போவதற்கு முன் ஒரு துண்டு மாவை எடுத்து வைப்பாள். மேற்கொண்டு அவள் அப்பம் சுடும்போது, புதிய மாவை பிசைந்து அதற்குள் எடுத்து வைத்த மாவை வைப்பாள் (காண்க 1 கொரிந்தியர் 5:6).[6] **மூன்றுபடி மாவு** என்பது (ஏறத்தாழ ஒரு மரக்கால்) நூறு பேருக்கு உணவளிக்க போதுமானது என்று கணக்கிடப் பட்டுள்ளது.[7]

வேத வசனங்களில், புளித்தமாவு பெரும்பாலும் தீங்கான செயல்களுக்கே ஒப்பிடப்படுகிறது (16:6-12; லூக்கா 12:1; 1 கொரிந்தியர் 5:6-8; கலாத்தியர் 5:9). பஸ்கா ஆசரிப்புக்கு முன், யூதர்கள் வீட்டிலிருக்கிற அனைத்து புளிப்புகளையும் அப்புறப்படுத்தி சுட்டெரிக்க வேண்டும். மேலும், தேவாலயத்தில் போஜனபலியில் புளிப்பு எதுவும் கலக்கப்படாமல் செலுத்த வேண்டும் (லேவியராகமம் 16:14-18). இந்த உவமையில் இயேசு தீமையான கிரியைக்கு ஒப்பிடவில்லை, ஏனெனில் பரலோக ராஜ்யம் உலகில் சாதகமான செல் வாக்கைக் கொண்டுள்ளது.

இயேசு இந்த உவமைக்கு விளக்கம் கொடுக்காமல், உலகமெங்கும், சபையாகிய இராஜ்யம், விரிவடையும் என்பதைக் காட்டுவதே இதன் நோக்கம். புளித்தமா அப்பம் சுடுவதற்கு பிசைந்த மாவுக்குள் மறைத்து வைக்கப்படுவதுபோல, இராஜ்யம் அப்பொழுது மறைத்து வைக்கப்பட்டிருந்தது. பெந்தெகோஸ்தே நாளில் அது முறையாக ஸ்தாபிக்கப்பட்ட பிறகோ, அதின் செல்வாக்கு ரோம சாம்ராஜ்யம் முழுவதும் பரவியது (ரோமர் 10:18; கொலோசெயர் 1:23). பிசைந்த மாவுக்குள் புளித்தமா மறைத்து வைக்கப்பட்டது போலவே, பரலோக இராஜ்யம் துவக்கத்தில்

*யாருக்கும் காணப்படக் கூடாத வகையில் ஏறத்தாழ கிரியை செய்தது; அது பரவ ஆரம்பித்தபோது, அதன் செல்வாக்கு தோற்றமளித்து.*

## *ஓர் இடைச்செய்தி (13:34-43)*

***உவமைகளின் நோக்கம் (13:34, 35)***

**[34]இவைகளையெல்லாம் இயேசு ஜனங்களோடே உவமைகளாகப் பேசினார்; உவமைகளினாலேயன்றி, அவர்களோடே பேசவில்லை.**

**[35]என் வாயை உவமைகளினால் திறப்பேன், உலகத்தோற்றமுதல் மறைபொருளானவைகளை வெளிப்படுத்துவேன் என்று தீர்க்கதரிசியால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இப்படி நடந்தது.**

***வசனம் 34.*** *கிறிஸ்து எப்பொழுதும் உவமைகளில் பேசவில்லை, ஆனால் இந்த நாளிலே அவர் பேசினார். மத்தேயு தனது கருத்தை வலியுறுத்தும் பொருட்டு நேர்மறையாகவும் எதிர்மறையாகவும் இந்த சத்தியத்தை முன்வைத்தார்:* ***இவைகளையெல்லாம் இயேசு ஜனங்களோடே உவமை களாகப் பேசினார்; உவமைகளினாலேயன்றி, அவர்களோடே பேசவில்லை*** *(ஒப்பிடுக யோவான் 1:3).*

***வசனம் 35.*** *இந்த அதிகாரத்தில் மீண்டும் ஒருமுறை, இயேசுவின் உவமை களின் நோக்கம் பேசப்படுகிறது. முந்தின நிகழ்வில் மத்தேயு குறிப்பிடுகையில் இயேசுவின் சீஷர்கள் கேட்ட கேள்விக்கு கர்த்தர் அளிக்கும் பதிலை எளிமையாக பதிவு செய்தார் (13:10-17). இங்கே, மத்தேயு தாமே இயேசுவின் செயல்களை விமர்சிக்கிறார். அவருடைய உபதேசமுறை பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனத்தின் நிறைவேற்றம் என்று வலியுறுத்தினார்.* ***தீர்க்கதரிசியால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இப்படி நடந்தது*** *எனும் வாக்கியம் இந்த சுவிசேஷம் முழுவதிலும் தொடர்ந்து முக்கியப்படுத்தப்படுகிறது (1:22ன் விளக்கவுரையைக் காண்க).[8]*

*சங்கீதம் 78, லிருந்து இயேசு மேற்கோள் காட்டுகிறார், அந்த சங்கீதம் பாரம்பரியப்படி மேலுரையின் மீது எழுதப்பட்ட வாசகம் ஆசாபினால் எழுதப்பட்டது. ஆசாப் தாவீதினால் நியமிக்கப்பட்ட இசைக்குழு தலைவனும், "பார்வையாளன்" என்றும் குறிப்பிடப்பட்டான் (1 நாளாகமம் 16:4-7; 25:1, 2; 2 நாளாகமம் 29:30). இந்த அடையாளம் வசனம் 35ல் குறிப்பிடப்படுகிற "தீர்க்கதரிசி" எனும் பதத்தோடு ஒத்துப்போகிறது.[9] சங்கீதம் 78ல், ஆசாப் இஸ்ரவேலின் வரலாற்றிலிருந்து வாபஸாகி "தனக்கு செவிசாய்ப்போர்களிடம் தெரிந்துகொள்ளப்பட்ட தேசத்தின் கடந்தகால தோல்விகளினால் எழுந்த எச்சரிக்கையைக் கேட்கும்படி குறிப்பிடுகிறார்."[10]*

*குறிப்பாக, உவமைகளில் பேசுவதைக் குறித்த மேற்கோள் வாக்கியம் சங்கீதம் 78:2ல் குறிப்பிடப்படுகிறது. அதன் முதல்வரி* ***என் வாயை உவமை களால் திறப்பேன்,*** *என்பது செப்துவஜிந்த் (எபிரேய புத்தகங்களின் கிரேக்க) மொழிபெயர்ப்புடன் பொருந்துகிறது. இருப்பினும், இரண்டாவது வரி,* ***பூர்வகாலத்து மறைபொருள்களை வெளிப்படுத்துவேன்,*** *என்பது ஒரு யூக மொழிபெயர்ப்பு.[11] மத்தேயுவில் இந்த மேற்கோள் வாக்கியத்தின்,*

*“மறைபொருள்” என்பது “ராஜ்யத்தின் ரகசியங்கள்” என்று இயேசு முன்பதாகப் பேசினார் (13:11; காண்க 1 கொரிந்தியர் 2:7-10; எபேசியர் 1:3-14; 3:9; கொலோசெயர் 2:2, 3).*

***களைகளைப் பற்றிய உவமையின் விளக்கம் (13:36-43)***

***36அப்பொழுது இயேசு ஜனங்களை அனுப்பிவிட்டு வீட்டுக்குப் போனார். அவருடைய சீஷர்கள் அவரிடத்தில் வந்து: நிலத்தின் களைகளைப் பற்றிய உவமையை எங்களுக்கு வெளிப்படுத்த வேண்டுமென்று கேட்டார்கள்.***

***37அவர் பிரதியுத்தரமாக: நல்ல விதையை விதைக்கிறவன் மனுஷகுமாரன்;***

***38நிலம் உலகம்; நல்ல விதை ராஜ்யத்தின் புத்திரர்; களைகள் பொல்லாங்கனுடைய புத்திரர்;***

***39அவைகளை விதைக்கிற சத்துரு பிசாசு; அறுப்பு உலகத்தின் முடிவு; அறுக்கிறவர்கள் தேவ தூதர்கள்.***

***40ஆதலால், களைகளைச் சேர்த்து அக்கினியால் சுட்டெரிக்கிறது போல, இவ்வுலகத்தின் முடிவிலே நடக்கும்.***

***41மனுஷகுமாரன் தம்முடைய தூதர்களை அனுப்புவார்; அவர்கள் அவருடைய ராஜ்யத்தில் இருக்கிற சகல இடறல்களையும் அக்கிரமஞ்செய்கிறவர்களையும் சேர்த்து,***

***42அவர்களை அக்கினிச்சூளையிலே போடுவார்கள்; அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும்.***

***43அப்பொழுது, நீதிமான்கள் தங்கள் பிதாவின் ராஜ்யத்திலே சூரியனைப்போலப் பிரகாசிப்பார்கள். கேட்கிறதுக்கு காதுள்ளவன் கேட்கக் கடவன்.***

***வசனம் 36.*** *இயேசு ஜனங்களை அனுப்பி விட்டு வீட்டுக்குப் போனார் (13:1). இது கப்பர்நகூமிலே நடந்தது. அநேகமாக பேதுருவின் வீட்டிலோ அல்லது அறியப்படாத ஒரு சீஷனுடைய வீட்டிலோ நடந்திருக்கலாம் (காண்க 4:13). இந்தக் காட்சியமைப்பில்,* ***அவருடைய சீஷர்கள்*** *அவரிடத்தில் வந்து,* ***களைகளைப் பற்றிய உவமையை*** *அறிந்து கொள்ள விருப்பம் தெரிவித்தார்கள் (காண்க 13:24-30).*

***வசனங்கள் 37-39.*** *இந்த வசனங்களில் இயேசு உவமையில் வரும் அநேக முக்கிய காரியங்களை அடையாளப்படுத்துகிறார், அதின் ஞானர்த்த இயல் புகளை விளக்கப்படுத்துகிறார்.*

*1.* ***நல்ல விதைகளை விதைக்கிறவன் மனுஷகுமாரன்.*** *விதைக்கிறவனைப் பற்றிய உவமையின் விளக்கவுரையில் (13:18-23), விதைக்கிறவன் அடையாளப்படுத்தப்படவில்லை; ஆனால் இங்கு இயேசு தெளிவாக தம் பெயரை “மனுஷகுமாரன்” என்றும் தம்மைத் தாமே விதைக்கிறவன் என்றும் குறிப்பிட்டார்.*

*2.* ***நிலம் உலகம்.*** *இது பரலோக ராஜ்யத்தைக் குறித்த உவமைகளில் ஒன்றாக இருக்கிற படியால், நல்ல விதைகள் விதைக்கப்பட்ட “நிலம்” சபையைக் குறிப்பிடுவதாக சிலர் நினைக்கின்றனர். ஆயினும், “நிலம் உலகம்”*

என்பதை இயேசு தெளிவாகக் குறிப்பிட்டார், அதாவது நீதிமான்களையும் அநீதிமான்களையும் உள்ளடக்கியிருக்கிற இடத்தைக் குறிப்பிட்டார்.

*3.* ***நல்ல விதை ராஜ்யத்தின் புத்திரர்.*** *"நல்ல விதை" என்பது விதைக்கிறவனைப் பற்றிய உவமையில் சொல்லப்படுகிற "ராஜ்யத்தின் வசனமல்ல" (13:19); இங்கு அது "ராஜ்யத்தின் புத்திரர்களைக்" குறிக்கிறது. மத்தேயு 8:12ல், "ராஜ்யத்தின் புத்திரர்" என்பது ராஜ்யத்தின் சுதந்தரவாளிகளான பாரம்பரியத்தின்படியான யூதர்களைக் குறிப்பிட்டது; ஆனால் அவர்கள் அதை வெறுத்துவிட்டனர். இங்கு அந்த பதம், தேவனுடைய ராஜ்யத்தின் உண்மையான சுதந்தரவாளியான இயேசுவின் விசுவாசமுள்ள சீஷர்களைக் குறிக்கிறது.*

*4.* ***களைகள் பொல்லாங்கனுடைய புத்திரர்.*** *இவர்கள் சாத்தானை பின்பற்றுபவர்கள். இரண்டு விதமான "புத்திரர்களை" இயேசு தெளிவாக வித்தியாசப்படுத்திக் காண்பிக்கிறார்: ஒருவர் ராஜ்யத்தின் புத்திரராக இருக்க வேண்டும் அல்லது பிசாசின் புத்திரராக இருக்க வேண்டும்.*

*5.* ***அவைகளை விதைக்கிற சத்துரு பிசாசு.*** *சாத்தான் "சத்துரு" என்று சரியாகச் சொல்லப்பட்டது (காண்க லூக்கா 10:19; 1 பேதுரு 5:8). அவன் தொடர்ந்து மறைவான சூழ்ச்சி செய்கிறவனாயும், தேவனுடைய ஜனங்களை கெடுத்து அழிக்கக் கூடிய வழிகளை கண்டு பிடிக்க முயற்சித்துக் கொண்டிருப்பவனுமாயிருக்கிறான்.*

*6.* ***அறுப்பு உலகத்தின் முடிவு.*** *நியாயத்தீர்ப்பை உருவகப்படுத்தி "அறுப்பு" என்று அடிக்கடி வேத வசனங்களில் பயன்படுத்தப்படுகிறது. "முடிவு" (sunteleia) என்ற வார்த்தை "நிறைவில்" அல்லது "பூர்த்தியான" நாட்கள் எனவும் மொழிபெயர்க்கலாம் (காண்க 13:40, 49; 24:3; 28:20). "ராஜ்யத்தின் புத்திரர்" இந்த உலகத்தில் "பொல்லாங்கனுடைய புத்திரரோடே" அவர்களுடைய இறுதி உண்மைத்துவம் நிரூபிக்கப்படும் வரை நிலைத்திருக்க வேண்டும்.*

*7.* ***அறுக்கிறவர்கள் தேவ தூதர்கள்.*** *தேவதூதர்கள் வேதவசனங்களில் மற்ற இடங்களில் தேவனுடைய முகவர்களாக நியாயத்தீர்ப்பை நிறைவேற்றுபவர்களாய் செயல் புரிவோர் என்று சொல்லப்படுகிறது (24:31; வெளிப்படுத்தின விசேஷம் 14:14-20).*

***வசனங்கள் 40-42.*** *இந்த நேரத்தில், இயேசு ஒரு பலமான ஓப்பீட்டைக் காட்டி* ***களைகளின்*** *விதி,* ***ஒன்றாக கூட்டிச் சேர்க்கப்பட்டு அக்கினியால் சுட்டெரிக்கப்படுவதற்கும்,*** *பொல்லாங்கான புத்திரர்,* ***காலத்தின் நிறைவில்*** *நியாயந்தீர்க்கப்படுவதையும் விவரிக்கிறார். கர்த்தர் அறுவடைக்காகத் திரும்ப வரும்பொழுது அவர்* ***தமது தூதர்களை அனுப்புவார்*** *(காண்க 16:27; 2 தெசலொனிக்கேயர் 1:7),* ***தமது இராஜ்யத்தில் அல்லது உலகத்தில் இருக்கிற சகல இடறல்களையும் அக்கிரமஞ் செய்கிறவர்களையும்*** *சேர்ப்பார். இந்த அக்கிரமக்காரர்கள் சேர்க்கப்பட்டு* ***அக்கினிச்சூளையிலே*** *போடப்படுவார்கள் (காண்க தானியேல் 3:6; வெளிப்படுத்தின விசேஷம் 20:10, 14, 15). இந்தச் சூளை "நரகத்தை" அல்லது "வேதனையுள்ள அக்கினி நிறைந்த பாதாளத்தைக்" குறிக்கும் (gehenna), அவியாத அக்கினியையுடையதும், அது "நித்திய அக்கினியை" உடையதுமாகும் (25:41; காண்க மாற்கு 9:44). மத்தேயு புத்தகத்தில் நியாயத்தீர்ப்பைக் குறிக்க தொடர்ந்து அக்கினி என்ற வார்த்தை பயன்படுத்தப்படுகிறது (3:10; 5:22; 7:19; 13:40, 42; 18:8, 9; 25:41). அவபக்தி*

*யானவர்கள் வேதனையுள்ள இடத்தில் பங்கடைவார்கள்,* ***அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும்*** *(காண்க 8:12; 22:13).*

***வசனம் 43.*** *இயேசு இந்த சிந்தனையைத் தூண்டும் நியாயத்தீர்ப்பைக் குறித்த உவமையை நேர்மறைக் கருத்தைச் சொல்லி முடிக்கிறார்:* ***நீதிமான்கள் தங்கள் பிதாவின் ராஜ்யத்தில் சூரியனைப் போல் பிரகாசிப்பார்கள்*** *(காண்க 25:34; 1 கொரிந்தியர் 15:24). நித்திய நகரத்தில், நீதிமான்கள் "சூரியனைப் போல்" பிரகாசிப்பார்கள் (காண்க தானியேல் 12:3; வெளிப்படுத்தின விசேஷம் 21:23; 22:5). இயேசு தமது செய்தியைக் கேட்டு கொண்டிருந்தவர்களிடம்,* ***கேட்கிறதற்கும் காதுள்ளவன் கேட்கக் கடவன்*** *என்று எச்சரித்தார் (காண்க 13:9ன் விளக்கவுரை).*

## *பரலோக ராஜ்யத்தைக் குறித்து இன்னும் மூன்று உவமைகள் (13:44-50)*

### *புதைத்திருந்த பொக்கிஷம் (13:44)*

***[44]அன்றியும், பரலோக ராஜ்யம் நிலத்தில் புதைத்திருக்கிற பொக்கிஷத்துக்கு ஒப்பாயிருக்கிறது; அதை ஒரு மனுஷன் கண்டு, மறைத்து, அதைப்பற்றிய சந்தோஷத்தினால் போய், தனக்கு உண்டான எல்லாவற்றையும் விற்று, அதைக் கொள்ளுகிறான்.***

***வசனம் 44. பரலோக ராஜ்யத்தைக்*** *குறித்து இயேசு மேலும் மூன்று உவமைகளை முன் வைக்கிறார் (13:44-50). இந்த முதல் உவமையில், ராஜ்யம்* ***நிலத்தில் புதைத்திருக்கிற பொக்கிஷத்தைக் கண்ட ஒரு மனுஷனுக்கு*** *ஒப்பிடப்படுகிறது. அக்காலங்களில் ஜனங்கள் பெரும்பாலும் தங்கள் விலையுர்ந்த பொருட்களை பூமிக்கடியில் புதைத்து வைப்பது வழக்கம் (25:25). "விசேஷமாக நெருக்கடியான சூழ்நிலை உருவாகும் போதும், அரசியல் கலவர நேரங்களிலும்" அப்படி செய்வதுண்டு.[12] முதல் நூற்றாண்டு பலஸ்தீனா பகுதியில், கிரிமினல் குற்றவாளிகளின் தேவையற்ற சண்டைக்கு இழுக்கும் பயத்துக்கும், அரசியல் குழப்பங்களால் ஏற்படும் மூர்க்கத்தனமான ஊழல் நபர்களின் தூண்டுகோலுக்கு பயந்து தங்கள் பொக்கிஷங்களைப் பாதுகாக்கும் பொருட்டு அவைகளை பூமிக்கடியில் புதைத்து வைப்பார்கள். கும்ரான் கண்டு பிடிப்புகள் இதை விளக்கப்படுத்துகிறது.[13] கும்ரானில் கண்டுபிடிக்கப்பட்ட செப்புத்தகட்டு சுருளில் அறுபத்தி நான்கு இடங்களில் பலஸ்தீனா பகுதியில் புதையல்கள் இருந்ததாகவும் அங்கே அறிக்கைப்படி, தங்கள், வெள்ளி, வாசனைத் திரவியங்கள், மற்றும் புஸ்தகச் சுருள்கள் புதைக்கப்பட்டிருந்ததாகச் சொல்லப்படுகிறது.*

*இயேசு இந்த உவமையில் குறிப்பிடுகிற மனுஷன் எப்படி அந்த பொக்கிஷத்தைக் கண்டுபிடித்தான் என்று குறிப்பிடவில்லை. அவனை ஒரு புதையலைத்தேடும் வேட்டைக்காரனாகச் சொல்லாததால், அவன் ஏதோ திடீரென்று கண்டுபிடித்திருக்க வேண்டும். புதையலைக் கண்டு பிடித்த பின், அதை* ***மறுபடியும் மறைத்து வைத்து*** *வேறு யாரும் கண்டுபிடிக்காதபடிக்கு செய்தான்.* ***சந்தோஷத்தால்*** *நிறைந்தவனாய், அவன்போய் தனக்கு உண்டான*

*எல்லாவற்றையும் விற்று அந்த* ***இடத்தை*** *கிரயத்துக்கு வாங்கினான்.*

*முதல் பார்வையில், ஒழுக்கமில்லாத செயலை பயன்படுத்தி ஆவிக்குரிய பாடத்தை இயேசு போதிப்பது போல் தோன்றும் (காண்க லூக்கா 16:1-9). அப்படியொரு முடிவுக்கு வருவதற்கு முன், மூன்று கருத்துக்களை ஒருவர் அலசிப்பார்க்க வேண்டும். முதலாவதாக, இந்த நிலம் இலவசமாகக் கிடைக்கிற சந்தர்ப்பமாக இருக்க வாய்ப்பு உண்டு: அந்த நிலத்தின் உரிமையாளர் உயிரோடில்லாமல் அந்தப் பொக்கிஷம் மறக்கப்பட்ட ஒன்றாக இருக்கலாம்.[14] இரண்டாவதாக, புதையலைக் கண்டுபிடித்தவன் சட்டத்துக்கு உட்பட்டு நிலத்தையும் அதிலுள்ளவைகளையும் வாங்கத் தீர்மானித்திருக்கலாம். பின்னதாக ரபீமார்கள் நிலத்தை வாங்குவதில் உண்மையில் ஏதேனும் கட்டுப்படும் என விவாதித்திருக்கலாம். நிலத்து உரிமையாளர் தனது நிலத்தில் ஒன்றையும், "அதிலுள்ள யாவற்றையும்" விற்க ஒப்புக் கொண்டிருக்கலாம்.[15] மூன்றாவது பரிசீலனை என்னவெனில் புதையலை கண்டு பிடித்தவன் நியாயமானவனாக இருந்திருக்க வேண்டும். இல்லாவிட்டால், கண்ட பொக்கிஷத்தை எடுத்துக் கொண்டு ஓடியிருப்பான். மாறாக, நிலத்தை அவன் கிரயத்துக்குக் கொள்ளவே விரும்புகிறான் அதினாலே நிலத்திலுள்ள பொக்கிஷமும் சட்டரீதியாக அவனுக்குரியதாகும்.[16]*

*நாம் இந்த மனுஷனுடைய ஒழுக்கரீதியான விஷயத்தில் அதிக அக்கரை காட்டி உவமையின் உண்மையான அர்த்தத்தை விட்டுவிட விரும்பவில்லை. கர்த்தர் இதிலே கொடுக்க விரும்புகிற முக்கிய கருத்து பரலோக ராஜ்யத்தின் மதிப்பை சம்பந்தப்படுத்திக் காட்டுவதுதான். புதையலைக் கண்டு பிடிக்க சந்தர்ப்பம் பெற்ற நபர் பொக்கிஷம் இருக்கிற அந்த நிலத்திற்காக தனக்குள்ள எல்லாவற்றையும் தியாகம் பண்ண விருப்பமாயிருந்தான். தேவனுடைய இராஜ்யத்தின் மகத்துவத்தைக் கண்டு பிடித்து புரிந்து கொள்ளுபவருக்கும் இது உண்மையானது. அதை அடைந்துகொள்வதற்கு எந்த ஒரு நபருக்கும் எவ்வித கிரயமும் விலையேறப்பட்டதல்ல (6:33; லூக்கா 18:28-30; பிலிப்பியர் 3:8, 9).*

### ***விலையுயர்ந்த முத்து (13:45, 46)***

***45மேலும் பரலோகராஜ்யம் நல்ல முத்துக்களைத் தேடுகிற வியாபாரிக்கு ஒப்பாயிருக்கிறது.***

***46அவன் விலையுயர்ந்த ஒரு முத்தைக் கண்டு, போய், தனக்குண்டான எல்லாவற்றையும் விற்று, அதைக் கொள்ளுகிறான்.***

***வசனங்கள் 45, 46.*** *அடுத்து, இயேசு,* ***இராஜ்யத்தை ஒரு நல்ல முத்தைத்தேடுகிற வியாபாரிக்கு ஒப்பிடுகிறார்.*** *வேதாகம நாட்களில் விலையேறப் பெற்ற கல் வகையிலேயே "நல்ல முத்துக்கள்தான்" மிகவும் விலையுயர்ந்தது (யோபு 28:18; மத்தேயு 7:6; 1 தீமோத்தேயு 2:9; வெளிப்படுத்தின விசேஷம் 17:4; 18:11, 12, 16, 17; 21:21).[17] நத்தை போன்ற அமைப்பையுடைய முத்துசிப்பிக் கூட்டுக்குள் முத்து உற்பத்தியாகிறது, செங்கடல் மற்றும் வளைகுடா பகுதிகளில் முத்துக்கள் பலதரப்பட்டவைகள் அறுவடையாகின்றன. வியாபாரி என்று இந்த உவமையில் குறிப்பிடப்படும்*

நபர் ஒரு "மொத்த வியாபாரி" (*emporos*) "சில்லரை வியாபாரியிடத்தி லிருந்து" வித்தியாசப்பட்ட வார்த்தை (*kapēlos*).[18] அவன் வெளியில் பல இடங்களுக்கும் பயணம் பண்ண வேண்டிய வியாபாரம் அது. அவன் தனது மறு விற்பனைக்கேற்ற நல்ல முத்துக்களைத் தேடுகின்றான், **ஒரு முத்து விலையுயர்ந்ததாக** அவனுக்கு கிடைக்கப் பெறுகின்றான். தனக்கு **உள்ள எல்லாவற்றையும் விற்று அவன் அதை வாங்கிக் கொள்கின்ற** அளவுக்கு அது மிகவும் விலையேறப் பெற்றதாயிருந்தது.

இதற்கு முன்பு சொல்லப்பட்ட உவமையைப் போலவே (13:44), இந்த உவமையும் கர்த்தருடைய மிகப்பெரும் விலை மதிப்புள்ள இராஜ்யத்தைக் குறித்து பேசுகிறது. இந்த இரண்டு உவமைகளுக்குமிடையேயுள்ள வித்தியாசம் என்னவெனில் முதல் மனிதன் எதிர்பாராமல் திடீரென பொக்கிஷத்தைக் கண்டு பிடித்தான் (இராஜ்யமாகிய அதை) அவன் தேடிக் கொண்டிருக்கவில்லை. அவனைப் பொறுத்தவரை பொக்கிஷத்தைக் கண்டுபிடித்தது ஒரு எதிர்பாராத ஆச்சரியம். இரண்டாவது மனிதன் முத்துக்களுக்காக தேடிக் கொண்டிருந்தவன், விலையுயர்ந்த ஒன்றை (ராஜ்யத்தை) அவன் கண்டு பிடித்தபோது அவன் உண்மையில் ஆச்சரியப்படவில்லை. ஆகிலும் இன்னமும் அதிலே பிரியமாயிருக்கிறான். இரண்டு உவமைகளிலுள்ள ஒற்றுமை என்னவெனில் இருவருமே தாங்கள் கண்டு பிடித்த பெரிய பொக்கிஷத்தை அடைய தங்களுக்குள்ள எல்லாவற்றையும் விற்று அதை அடைய விருப்பமுள்ளவர்களாயிருந்தார்கள்.

*சகலவித மீன்களையும் வாரிக்கொள்ளும் வலை (13:47-50)*

**47 அன்றியும், பரலோகராஜ்யம் கடலிலே போடப்பட்டு, சகலவிதமான மீன்களையும் சேர்த்து வாரிக்கொள்ளும் வலைக்கு ஒப்பாயிருக்கிறது.**

**48 அது நிறைந்தபோது, அதைக் கரையில் இழுத்து, உட்கார்ந்து, நல் லவைகளைக் கூடைகளில் சேர்த்து ஆகாதவைகளை எறிந்து போடுவார்கள்.**

**49 இப்படியே உலகத்தின் முடிவிலே நடக்கும். தேவதூதர்கள் புறப்பட்டு, நீதிமான்களின் நடுவிலிருந்து பொல்லாதவர்களைப் பிரித்து,**

**50 அவர்களை அக்கினிச்சூளையிலே போடுவார்கள். அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும் என்றார்.**

**வசனங்கள் 47, 48.** இந்த கூட்ட உவமைகளில் மூன்றாவது **இராஜ்யத்தைக்** குறித்த உவமை (13:44-50) யில் **ஒரு வலை கடலுக்குள் போடப்படுகிறது.** "சகலவித மீன்களையும் வாரிக்கொள்ளும் வலைக்கு" கிரேக்க மொழியில் (*sagēnē*), ஆங்கிலத்தில் "seine" என்ற வார்த்தையை இதி லிருந்து நாம் பெறுகிறோம். இந்த மீன் பிடிக்கும் மிகப் பெரிய வலையின் மேல் பகுதியில் மிதப்புக் கட்டைகளும் கீழே பளுவான பொருட்களும் இணைக்கப்பட்டிருக்கும். அந்த வலையை இரண்டு படகுகளுக்கு இடையிலோ அல்லது ஒரு புறம் கரையிலும் மறுபுறம் படகிலும் கட்டப்படலாம். இந்த வலை பல நூறு கிலோ எடையுள்ள மீன்களை பிடித்துக் கொள்ளும் வலிமையுள்ளது.

இந்த உவமையில் வலை கடலிலே போடப்பட்டபோது, **சகலவித மீன்களையும்** அது சேர்த்து வாரிக் கொண்டது, வலை கரைக்கு இழுத்துப்

போடப்பட்டு, **நல்ல மீன்களை ஆகாதவைகளிலிருந்து பிரிப்பார்கள்.** "ஆகாதவைகள்" என்று குறிப்பிடப்படும் பெயருடைய பண்புச்சொல் (*sapros*) நேரடிப் பொருளில் "கெட்டவை" அல்லது "அழுகிப் போனவை" என்று கூறலாம் ஆகிலும், அது உருவகமாக "கெட்டவைகளை" "மோசமானவை" "அழுகிப்போனவை" அல்லது "முழுமையடையாதவை" என்றெல்லாம் குறிப்பிடலாம்.[19] புதிதாக அப்போதுதான் பிடிக்கப்பட்டது என்பதால் "கெட்டுப் போனவைகளோ," "அழுகிபோனவைகளோ" இருக்க வாய்ப்பில்லை, மாறாக "ஆகாதவைகள்" என்று இங்கே குறிப்பிடப்படுவதால், புசிக்கக் கூடாது என்று யூதர்களுக்குச் சொல்லப்பட்ட மீன் வகைகளாக இருக்கலாம். இந்த அசுத்தம் என்று கருதப்பட்ட மீன்களுக்கு சிறகோ செதில் களோ இராது (லேவியராகமம் 11:10, 11), அவைகளை நல்ல மீன்களிலிருந்து சுலபமாக பிரித்தெடுக்கலாம். Craig S. Keener "கலியேயாக்கடலில் குறைந்த பட்சம் இருபத்தி நான்கு வகை மீன்கள் வாழ்ந்தன, அவைகளில் அநேக வகைகள் அசுத்தமானவை அல்லது புசிக்க இயலாதவை என்று கருதப்பட்டது, வலையினால் இந்த வித்தியாசத்தைக் கண்டு பிரித்து எடுத்து மீன்களைப் பிடிக்க முடியாது" என்றார்.[20] ஆகாத மீன்களுக்கு விலையேதுமில்லை; மீன்பிடிப்பவர்கள் அவைகளை எறிந்து விடுவார்கள். எப்படியிருப்பினும், நல்லவைகள் சந்தைகளில் நல்ல விலைக்கு விற்கப்பட்டன.

**வசனங்கள் 49, 50.** களைகளைப் பற்றிய உவமைகளைப் போன்று இந்தக் கதையிலும் நியாயத்தீர்ப்பு **உலகத்தின் முடிவில்** வரும் என்று சொல் லப்பட்டது (காண்க 13:40). மீண்டும் ஒருமுறை **தேவ தூதர்கள்தான் நீதிமான்களிலிருந்து பொல்லாதவர்களை** பிரிப்பார்கள் (காண்க 13:41). பொல்லாதவர்களுக்குக் கொடுக்கப்படும் தண்டனை மாத்திரமே இங்கே சொல்லப்படுகிறது. தேவ தூதர்கள், அவர்களை **அக்கினிச் சூளையிலே போடுவார்கள்,** அங்கே **அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும்** (காண்க 13:42). நியாயத்தீர்ப்பு நாள் யார் ராஜ்யத்திலே விசுவாசமுள்ள பிரஜைகளாக இருந்தார்கள் என்பதையும் யார் விசுவாசமில்லாதிருந்தார்கள் என்பதையும் வெளிப்படுத்தும்.

## வீட்டெஜமானைக் குறித்த உவமை (13:51, 52)

**51 பின்பு, இயேசு அவர்களை நோக்கி; இவைகளையெல்லாம் அறிந்து கொண்டீர்களா என்று கேட்டார். அதற்கு அவர்கள்: ஆம், அறிந்து கொண்டோம், ஆண்டவரே, என்றார்கள்.**

**52 அப்பொழுது அவர் அவர்களை நோக்கி: இப்படியிருக்கிறபடியால், பரலோக ராஜ்யத்துக்கடுத்தவைகளில் உபதேசிக்கப்பட்டுத் தேறின வேதபாரகன் எவனும் தன் பொக்கிஷத்திலிருந்து புதியவைகளையும் பழையவைகளையும் எடுத்துக் கொடுக்கிற வீட்டெஜமானாகிய மனுஷனுக்கு ஒப்பாயிருக்கிறான் என்றார்.**

இந்த முடிவுரை உவமை பரலோக ராஜ்யத்தில் இருப்பவர்கள் எப்படி மற்றவர்களுக்குப் போதிக்கத்தக்க திராணியுள்ளவர்களாயிருக்க வேண்டுமென்பதை வலியுறுத்துவது போலுள்ளது. பின்னால், அவர்கள்

சுவிசேஷத்தைப் பரப்பச் செல்லும் போது, இயேசு அவர்களுக்குச் சொல்லிக் கொண்டிருந்த எல்லாவற்றிலுமிருந்து எடுத்துக் கொள்ள வேண்டியதிருந்தது.

**வசனம் 51.** ஒன்றைக் கேள்விப்படுதல் என்பது அதை புரிந்து கொள்வதிலிருந்து வித்தியாசப்பட்டது. உண்மையில், ஒருவன் பேசப்படுகிற ஒவ்வொரு வார்த்தையையும் கேட்டு சொல்லுக்குச் சொல் தவறாமல் திருப்பிச் சொல்லவும் கூடிய திறமையிருக்கலாம், ஆகிலும் சொல்லப்பட்டதன் பொருளை புரிந்து கொள்ளாமல் இருக்கலாம். சீஷர்கள் இவைகள் எல்லாவற்றையும் அவர்கள் தொகுத்து இயேசு போதித்த எல்லாவற்றையும் புரிந்து கொள்ள வேண்டும் என்று எதிர்பார்த்தார். அவர் கேட்ட கேள்விக்கு அவர்கள் கொடுத்த உறுதியான பதிலிலிருந்து, இதை அவர்கள் செய்துள்ளார்கள் என்பது தெளிவாகத் தெரிகிறது.

**வசனம் 52.** இந்த வசனம் அதிகாரத்தில் வருகிற முடிவுரை உவமையைக் கொண்டுள்ளது, அதின் துல்லியமான பொருள் நமக்கு அறைகூவல் விடுகிறது. **இயேசு** பரலோகராஜ்யத்தின் **சீஷராகியுள்ள ஒவ்வொரு வேதபாரகனையும் குறிப்பிடுகிறார்.** "வேதபாரகன்" என்பவன் பழைய ஏற்பாட்டை நகல் எடுப்பவன். அந்த அனுபவம் மாத்திரமே அவனை வேதவசனங்களை அறிந்தவனாக ஆக்கியிருக்கும். எல்லாவற்றுக்கும் மேலாக, "சீஷனாக" மாறும்போது ஒரு வேதபாரகன் இயேசுவின் போதனைகளை கற்றிருப்பான் (காண்க 8:19; நடபடிகள் 4:13). கர்த்தர் அப்படிப்பட்ட மனுஷனை **ஒரு வீட்டெஜமானனுக்கு ஒப்பிட்டு, அவன் பொக்கிஷத்திலிருந்து புதியவைகளையும் பழையவைகளையும் எடுத்துக் கொடுப்பதற்கு ஒப்பிடுகிறார்.** கிரேக்க வார்த்தை (*thēsauros*) "பொக்கிஷத்தைக்" குறிக்கிறது, அல்லது அதைக் கொண்டிருப்பதைக் குறிக்கிறது. பொக்கிஷப் "பெட்டகம்" அல்லது "பொருள் வைக்கும்" அறை என்றெல்லாம் பொருள்படும் (காண்க 2:11க்கான விளக்கவுரை; 6:19; 12:35). பொக்கிஷத்திலிருந்து "பழையவைகள்" என்பது பழைய ஏற்பாட்டு வசனங்களிலிருந்து எடுத்துச் சொல்லும் சத்தியம், "புதியவைகள்" என்ற பொக்கிஷம் இயேசுவின் புதிய போதனைகளைக் குறிக்கிறது.

✧✧✧✧✧ **பாடங்கள்** ✧✧✧✧✧

## சுவிசேஷம் எனும் புளித்தமா (13:33)

இயேசு விளக்கவுரை கொடுக்காமல் புளித்தமா பற்றிய உவமையைச் சொன்னார், ஆனால் அவர் போதிப்பதை நாம் அறிந்து கொள்ள முடியும் ஏனெனில் புளித்தமாவின் குணம் நாம் அறிந்ததே.

1. *புளித்தமா பிசைந்த மாவுக்குள்ளிருந்து கிரியை செய்கிறது.* அதேபோல, கிறிஸ்துவின் ஆவி இருதயத்தில் கிரியை செய்கிறார். இன்று நம்முள் வாசம் பண்ணுகிற அதே ஆவியானவர்தான் ஆதிக்கிறிஸ்தவர்களுக்குள்ளாகவும் கிரியை செய்து உலகமெங்கும் போய் சுவிசேஷத்தை பிரசங்கம் பண்ணவைத்தார். உண்மையும் நன்மையுமான இருதயங்களில் நாட்டப்பட்ட சுவிசேஷம் ஜனங்களுடைய வாழ்க்கையை மாற்றி மறுரூபமாக்கும்.

2. *புளித்தமாவின் கிரியை படிப்படியாக செயல்படும்.* சுவிசேஷம் எனும் புளித்தமா ஒவ்வொரு கிறிஸ்தவனின் வாழ்விலும் இருக்க வேண்டும்

மற்றும் அது வழிந்தோடி ஒருவரின் இருதயத்திலிருந்து இன்னொருவரின் இருதயத்தில் கிரியை செய்ய வேண்டும். சுவிசேஷம் என்பது, அதிரடியாக வந்து அதிர்ச்சியுண்டாக்கும் எரிமலையல்ல, படிப்படியாக ஆனால் உறுதியாக கிரியை செய்கிறது.

3. *புளிப்புமா பிசைந்தமாவில் தானாக உருவாவதில்லை; அது சேர்க்கப்பட வேண்டும்.* சுவிசேஷம் எனும் புளிப்பும் மனிதனிடத்திலிருந்து உண்டானதல்ல; அது பாவத்துக்கான தெய்வீக நிவாரணம் (யாக்கோபு 1:21). சுவிசேஷமானது கிறிஸ்தவர்களால் உலகத்திற்கு கொண்டு செல்லப்பட வேண்டும் (28:18-20). மாவில் புளித்தமா செய்வது போல, அது உடனடியாக இருதயத்தில் கிரியை செய்யத்துவங்கும்.

4. *உவமையில் குறிப்பிடப்படுகிற புளித்தமா ஒரு இடத்தில் மட்டும் இருக்கக் கூடிய ஒன்றல்ல.* அது மூன்றுபடி மாவுக்குள் அடக்கி வைக்கப்பட்டிருந்தது. இதே கொள்கைதான் சுவிசேஷத்தை பரப்புகிற விஷயத்தில் பின்பற்றப்பட வேண்டும்: ஒவ்வொரு சமுதாயத்திலும் உள்ளூர் சபை ஸ்தாபிதம் பெற வேண்டும் அதினால் தேவனுடைய இரட்சிப்பின் செய்தி அதிக ஜனங்களைச் சென்றடையும்.

## இராஜ்யத்தின் மதிப்பு
## *(13:44-46)*

13:44-46ல் இயேசு கொடுத்த இரண்டு உவமைகளும் பரலோக ராஜ்யத்தின் மதிப்பைக் காட்டுகிறது. அப்படியொரு பாடம் ஏன் நமக்குத் தேவைப்படுகிறது? இதோ சில காரணங்கள்:

1. *அதன்மதிப்பு அதன் விலையைக் கொண்டு நிர்ணயிக்கப்படுகிறது.* இராஜ்யம், அல்லது சபைதான், ஸ்தாபிதம் பெற்ற வேறெந்த ஸ்தாபனத்தைக் காட்டிலும் மிகமிக விலைமதிப்புடையது. இதன் ஸ்தாபிதத்திற்கு கிறிஸ்துவின் விலையேறப்பட்ட இரத்தம் தேவைப்பட்டது (1 பேதுரு 1:18, 19).

2. *அதன் மதிப்பு அதில் கிடைக்கும் நன்மைகளைக் கொண்டு விவரிக்கப்படுகிறது.* எப்படி மற்ற காரியங்களை நாம் மதிப்பிடுகிறோமோ அதேபோல, நம்மை நாமே கேட்டுக் கொள்வோம், “சபையில் இருப்பவர்களுக்கு கிடைக்கப்பெறும் நன்மைகள் என்ன?”

3. *அதன் மதிப்பு அதை சொந்தமாகக் கொண்டுள்ளவரைக் கொண்டு தீர்மானிக்கப்படுகிறது.* சபையை கிறிஸ்து சொந்தமாக்கிக் கொண்டுள்ளார். தாம் அதைக் கட்டுவதாக வாக்குத்தத்தம் செய்தார் (16:18, 19), கடைசி நாளில் அதை அவர் தமது பிதாவினிடத்தில் ஒப்புக் கொடுப்பார் (1 கொரிந்தியர் 15:24).

4. *அதன் மதிப்பு அதன் ஊழியத்தால் காட்டப்படுகிறது.* சபையின் ஊழியம் உலகில் சுவிசேஷத்தை பகிர்ந்து கொள்வது, மற்றும் நித்திய இரட்சிப்புக்கு மற்றவர்களை கிறிஸ்துவினிடத்தில் கொண்டு வருவது.

5. *அதன் மதிப்பு அதன் எதிர்காலத்தைக் கொண்டு தீர்க்கப்படுகிறது.* விசுவாசமுள்ள (கிறிஸ்தவர்கள்) அங்கத்தினர்கள் கிறிஸ்துவிடம் ஒப்புக்கொடுக்கப்பட்டு அவரோடே கூட ஆளுகை செய்யவும் நியாயந்தீர்க்கவும் செய்வார்கள் (1 கொரிந்தியர் 6:2; எபேசியர் 5:26, 27). சபையிலிருந்து

*பின் வாங்கிப் போவோர் தேவனுடைய நித்திய பிரசன்னத்திலிருந்து புறம்பாக்கப்படுவார்கள் (2 தெசலோனிக்கேயர் 1:9; 1 பேதுரு 4:17).*

## *புதைக்கப்பட்ட பொக்கிஷம் பற்றிய உவமை (13:44)*

*புதைக்கப்பட்ட பொக்கிஷம் பற்றிய உவமை மூன்று முக்கிய பாடங்களை நமக்குப் போதிக்கிறது.*[21]

*1. பொக்கிஷம். பரலோக ராஜ்யம் உலகில் இருக்கிற மற்ற எல்லா பொக்கிஷங்களிலும் மகாப்பெரியது. ஒருவருக்கு உண்டாயிருக்கும் அனைத்து சொத்துக்களிலும் பலன்களிலும் மேலான பாத்திரமுள்ளது. அதன் மதிப்புடன் எதையும் ஒப்பிட முடியாது.*

*2. தியாகம். புதைக்கப்பட்ட பொக்கிஷத்தை கண்டு பிடித்தபோது, அதை கிரயத்துக்கு கொள்ளும்படி தனக்குள்ள எல்லாவற்றையும் விற்று பெற்றுக் கொள்கிறான். இராஜ்யத்தின் குடிமகனாக இருக்க விரும்பினால் ஒருவன் தியாகம் பண்ணும் மனமுள்ளவனாயிருக்க வேண்டும். சீஷத்துவத்திற்கு சுயதியாகம் தேவைப்படுகிறது (16:24).*

*3. சந்தோஷம். அதை கண்டுபிடித்த மனிதன் தனக்கு உண்டான எல்லாவற்றையும் சந்தோஷமாய் விற்று பொக்கிஷம் இருக்கும் அந்த நிலத்தை வாங்குகிறான் ஏனெனில் அந்தப் பொக்கிஷம் மற்ற எல்லாவற்றிற்கும் மேலான மதிப்பை உடையது. கிறிஸ்துவையும் அவருடைய ராஜ்யத்தின் பொக்கிஷத்தையும் ஒருவர் உணர்ந்து கொள்ளும்போது, சீஷத்துவத்துக்குரிய தியாகத்தைச் செய்ய அவர் வருத்தப்படுவதில்லை. மாறாக, ராஜ்யத்தின் ஒரு அங்கமாக இருப்பதிலுள்ள சிலாக்கியங்களின் நிமித்தம் அவர் சந்தோஷப்படுகிறார்.*

டேவிட் ஸ்டீவர்ட்

---

குறிப்புகள்

[1]F. N. Hepper, "Plants," in *New Bible Dictionary*, 2d. ed., ed. J. D. Douglas and Norman Hillyer (Wheaton, Ill.: Tyndale House Publishers, 1982), 948. [2]Mishnah *Tohoroth* 8.8; *Niddah* 5.2 காண்க. [3]Talmud *Ketuboth* 111b. [4]W. F. Albright and C. S. Mann, *Matthew*, The Anchor Bible (Garden City, N.Y.: Doubleday & Co., 1971), 169. [5]*1 Enoch* 90.30, 33, 37. [6]காண்க Leon Morris, *The Gospel according to Matthew*, Pillar Commentary (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1992), 353. [7]Craig S. Keener, *The IVP Bible Background Commentary* (Downers Grove, Ill.: InterVarsity Press, 1993), 84. [8]*சில பழங்கால எழுத்துப் பிரதிகள் குறிப்பாக தீர்க்கதரிசி எனும்பதத்தை "ஏசாயா" என்று குறிப்பிடுகின்றனர், ஆனால் இது சரியானதல்ல என்பது தெளிவு.* Bruce M. Metzger, *A Textual Commentary on the Greek New Testament,* 2d ed. (Stuttgart: German Bible Society, 1994), 27. [9]*சங்கீதக்காரனாகிய தாவீதும் "தீர்க்கதரிசி" என்று நடபடிகள் 2:29, 30ல் குறிப்பிடப்படுகிறது.* [10]Eddie Cloer, *Psalms 51-89,* Truth for Today Commentary (Searcy, Ark.: Resource Publications, 2006), 484.

[11]*சில எழுத்துப் பிரதிகளில் "உலகத்துக்குரிய" என்ற வார்த்தையை சேர்க்கவில்லை.* (Metzger, 28.) [12]Albright and Mann, 170. [13]David Hill, *The Gospel of Matthew,* The New Century Bible Commentary (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co.,

1972), 238. [14]J. W. McGarvey, *The New Testament Commentary*, vol. 1, *Matthew and Mark* (N.p., 1875; reprint, Delight, Ark.: Gospel Light Publishing Co., n.d.), 124. [15]Mishnah *Baba Bathra* 4.8, 9. [16]ரபீமார்கள் பொக்கிஷத்தைக் கண்டு பிடித்தவர் எதையெல்லாம் தனக்கு வைத்துக் கொள்ளலாம் என்று விவாதிப்பார்கள். (Talmud *Baba Metzia* 25a; Jerusalem Talmud *Baba Metzia* 2.5.) [17]Albright and Mann, 170. [18]Walter Bauer, *A Greek-English Lexicon of the New Testament and Other Early Christian Literature,* 3d., ed., rev. and ed. Frederick W. Danker (Chicago: University of Chicago Press, 2000), 325. [19]Ibid., 913. [20]Keener, *Matthew*, 392.

[21]Neil R. Lightfoot, *Lessons from the Parables* (Grand Rapids, Mich.: Baker Book House, 1965), 40-41 தழுவி எழுதப்பட்டது.